2020 மார்ச் 9] [பேரவைத் தலைவர்]

28-2-2020 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இப்பெருந்தகையின் மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.”

(இ) பேராசிரியர் க. அன்பழகன், முன்னாள் அமைச்சர் மற்றும் அவை முன்னவர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *“திராவிட இயக்கத்தின் கொள்கைகளில் ஆழமான நம்பிக்கை கொண்டவரும், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., கலைஞர் திரு. மு. கருணாநிதி ஆகியோரோடு அரசியலில் பயணித்தவரும், பகுத்தறிவுக் கொள்கைகளை தன் இறுதி மூச்சு வரை சிறிதும் பிறழாமல் கடைபிடித்தவரும், சமூக நீதிக்காகவும், மொழி உரிமைக்காகவும் பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டவரும், 1957 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை 9 முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், 1962 முதல் 1967 வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1967 முதல் 1971 வரை திருச்செங்கோடு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களவை உறுப்பினராகவும், இப்பேரவையில் அவை முன்னவராகவும், மக்கள் நல்வாழ்வு, கல்வி, நிதி ஆகிய துறைகளின் அமைச்சராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும் சிறப்பாகப் பணியாற்றியவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராகத் தொடர்ந்து பணியாற்றியவருமான பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், 7-3-2020 அன்று மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

முற்பகல் 10–05

தமிழ்ப் பற்றும், தேசிய உணர்வும் கொண்ட குடும்பத்தில் உதித்த பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், எளிமை, அடக்கம், இரக்கம் என உயர்ந்த பண்புகளை இயற்கையாகவே தன்னகத்தே பெற்றுத் திகழ்ந்தவர். கல்லூரிப் பேராசிரியராக தன்னுடைய பணியைத் தொடங்கி, தமிழர் வாழ்வு, தமிழ் மொழி இலக்கியம்,

பண்பாடு, வரலாறு என பல்வேறு துறைகளை ஆழ்ந்து கற்று பல படைப்புகளை வெளியிட்டுள்ளார். அமைச்சராக, பேரவை முன்னவராக, பேரவையில் விவாதங்களில் சூடுபறக்கும்போது தன்னுடைய ஆணித்தரமான கருத்துகளை மற்றவர்களும் ஏற்கும் வண்ணம் தெரிவித்து, இப்பேரவையை அமைதிப்படுத்தி ஜனநாயக முறையில் விதிமுறைப்படியும், மரபுப்படியும் பேரவை நிகழ்ச்சிகள் நடைபெற பெரிதும் உதவியவர் என்பது அவரோடு பணியாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிந்ததே. பேரவையின் மாண்பும், சிறப்பும், உயர்வும் எந்நாளும் காக்கப்பட வேண்டும் என்ற கொள்கை உறுதி கொண்டவர். அவையில் விவாதம் திசைமாறிச் செல்கையில், அவருடைய கட்சியைச் சார்ந்தவர்களேயானாலும்கூட அதை ஒருநாளும் பேராசிரியர் அனுமதித்தது இல்லை. பேராசிரியப் பெருந்தகையின் மறைவால் வருந்தும் அவர்தம் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் புதன்கிழமை (11-3-2020) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை முற்பகல் 10-06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

– – – – – –